


# தமிழ் இலக்கியங்களில் மலர்களின் மாண்புகளும் மருத்துவக் குணங்களும்

பகுதி - II



ISBN 938054324-7
9 789380 543246

Zodiac Systems @ +91 98430 22091

# பொருளடக்கம்


| வரிசை எண் | பெயர் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | மணிமேகலை.இரா | 1 |
| 2 | தமிழரசி.த | 7 |
| 3 | காளீஸ்வரி.ர | 12 |
| 4 | பரணி.சு | 17 |
| 5 | நாகம்மாள்.த | 22 |
| 6 | கீதா.மு | 28 |
| 7 | கோகுல்நாத்.ப | 35 |
| 8 | செயந்தி.செ | 41 |
| 9 | வசந்தி.த | 45 |
| 10 | ஜோசப் குளொரி.செ | 50 |
| 11 | புவனேஸ்வரி.ம | 57 |
| 12 | அன்புக்கோகிலா.க | 62 |
| 13 | கல்பனா சங்கர் | 68 |
| 14 | காஞ்சனா | 74 |
| 15 | கண்ணன்.அர | 79 |
| 16 | கவிதா.மு | 87 |
| 17 | செல்லம்மாள்.கோ.ப | 92 |
| 18 | விசய சுந்தரம் | 97 |
| 19 | கலைச்செல்வன்.ச | 102 |
| 20 | லதா.க.ர | 110 |
| 21 | பிரகாசினி.ப | 119 |
| 22 | மகாலட்சுமி.ஆ | 123 |
| 23 | முருகேசன்.க | 128 |
| 24 | சித்ரகலா.ம | 134 |
| 25 | ஜூலியட் மரிய.ஞா | 139 |
| 26 | மணிகண்டன்.சே | 145 |
| 27 | மணிமாறன்.க | 150 |
| 28 | மோகன்ராஜ்.ச | 155 |
| 29 | மோகன்ராசு.கு | 160 |

# தேவாரத்தில் நீர்ப்பூக்கள்

முனைவர்.இரா.மணிமேகலை
உதவிப்பேராசிரியர்

தமிழ் நூல்கள் மலர்களைக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நான்காக வகைப்படுத்தி உள்ளன. இவற்றோடு புதர்ப்பூ என்ற வகையைச் சேர்த்து ஐந்தாகக் கூறுவாரும் உண்டு. நீரில் மட்டுமே வளரக் கூடிய தாவரங்களில் இருந்து தோன்றும் பூக்களே நீர்ப்பூக்கள் எனப்படும். ஏரி, குளம், குட்டை, ஓடை, சுனை, கழி, வயல் முதலிய இடங்களில் இத்தகைய மலர்கள் காணப்பெறுகின்றன. தாமரை, அல்லி, செங்கழுநீர், கருங்குவளை, கருநெய்தல் முதலியன சிறந்த நீர்ப்பூக்களாகும். இவை பற்றி மூவர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள் இக்கட்டுரையில் ஆய்ந்துரைக்கப் பெறுகின்றன.

**தாமரை**

தமிழ் இலக்கியங்களில் மிகவும் புகழ்ந்து பேசப்பெறும் மலர் தாமரையேயாகும். அப்பர் பெருமான 'பூவினுக்கு அருங்கலம் பொங்குதாமரை (4 - 11 -2) என்று இதன் பெருமையைக் காட்டுகின்றார். சிவபெருமான் திருவடிகளுக்கு உவமையாகக் காட்டப்பெறும் சிறப்பும் தாமரைக்கு உண்டு.

**ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடியானும்(4-4-8)**

என்று தேவாரம் போற்றுவது குறிப்பிடத்தக்கது. தெய்வங்கள் வீற்றிருக்கும் சிறப்பால் தாமரைக்குத் தெய்வமலர் என்ற பெயரும் அமைந்தது.

சோழநாட்டில் வயல்கள் வளமாக இருப்பதால் அதில் தாமரைக் கொடிகள் படர்ந்து பூக்கின்றன. இச்செய்தி சம்பந்தர் தேவாரத்தில் பலவிடங்களில் காட்டப்பெறுகிறது.

**பங்கயங்கள் மலரும் பழனத்துச்**
**செங்கயல்கள் திளைக்குந் திருப்புன்கூர்; ( 1-27-3)**

மடையிடை அன்னமெங்கும் நிறையப் பரந்துகமலத்து